செ.வெ.எண்.34 நாள்: 14.10.2020

# தூத்துக்குடி மாவட்டம் கருங்குளம் ஒன்றியம் வசவப்பபுரத்தில் பசுமை வீடுகள் திட்டத்தில் 23 திருநங்கைகளுக்கு வீடுகள் கட்டும் பணிகளையும், தாமிரபரணி நதியில் முறப்பநாடு பகுதியில் ரூ.12.29 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார்

-----------------------------------------------------------------------------------------------

தூத்துக்குடி மாவட்டம் கருங்குளம் ஒன்றியம் வசவப்பபுரத்தில் பசுமை வீடுகள் திட்டத்தில் 23 திருநங்கைகளுக்கு வீடுகள் கட்டும் பணிகளையும், தாமிரபரணி நதியில் முறப்பநாடு பகுதியில் ரூ.12.29 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (14.10.2020) நேரில் சென்று ஆய்வு செய்தார்.

கருங்குளம் ஒன்றியம் வசவப்பபுரத்தில் 23 திருநங்கைகளுக்கு தலா ரூ.2.10 லட்சம் வீதம் மொத்தம் ரூ.48.30 லட்சம் மதிப்பில் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் பணிகள் இறுதிகட்டமாக நடைபெற்று வருகிறது. மேலும் இப்பகுதியில் தலா ரூ.2.70 லட்சம் மதிப்பில் 3 பகுதியில் சிமிண்ட் தெரு அமைக்கும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். 22 வீடுகளின் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. ஒரு வீட்டின் பணி நடைபெற்று வந்தது. இப்பணிகளையும் விரைந்து முடிக்கவும், வடிகால் அமைக்கவும் உத்தரவிட்டார்.

தொடர்ந்து தாமிரபரணி நதியில் முறப்பநாடு பகுதியில் ரூ.12.29 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் எனவும், வரும் மழைக்காலத்தில் ஆற்றில் அதிக நீர் வரத்து இருக்கும் அதற்கு தகுந்தாற்போல் பணிகளை செய்து முடிக்க வேண்டும் என அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். தொடர்ந்து தடுப்பணை கட்டும் இடம், மதகு அமைக்கும் இடம், நீர் வழிந்து செல்லும் பகுதி ஆகிய பகுதிகளுக்கு சென்று பணிகளை பார்வையிட்டார்.

இந்த ஆய்வின்போது கருங்குளம் ஒன்றியக்குழு தலைவர் திருமதி.கோமதிராஜேந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.தனபதி, ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திருமதி.சங்கரேஸ்வரி, பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு தாமிரபரணி கோட்டம்) செயற்பொறியாளர் திரு.அண்ணாத்துரை, உதவி செயற்பொறியாளர் திரு.தங்கராஜ், உதவி பொறியாளர் திரு.ஆதிமூலம், தடுப்பணை ஒப்பந்த நிறுவன மேலாளர் திரு.கோமதிசண்முகராஜ், கருங்குளம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.வெங்கடாசலம், திருமதி.பாக்கியம்லீலா, ஒன்றிய பொறியாளர் திரு.சித்திரைசேகர், வசவப்பபுரம் ஊராட்சி தலைவர் திருமதி.சாந்திலெட்சுமி, கருங்குளம் ஊராட்சி ஒன்றிய பணி மேற்பார்வையாளர் திரு.சிவக்குமார் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.